மாட்சிமை

கீதங்கள்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

பாஸ்டர் M. இராஜேந்திரன் அவர்கள் பாடிய இசை நாடாக்கள்

Volume - 1 *(புதுராக கீதங்கள்)*

Side A		Side B	
1	கர்த்தரை துதிசெய்து	1	லேவியரே! ஆசாரியரே
2	காலைதோறும் கர்த்தனே	2	இயேசுவின் கிருபை மேன்மையே
3	குயவனின் கைகளில்	3	சிலுவைகள் பாடுகள் சுமந்தே
4	பரன் இயேசுவை	4	கர்த்தர் என் மேன்மையும்
5	என் தேவனே	5	தயவுள்ள இயேசுவின்
6	இயேசுவின் நாமம்	5	துதித்திடுவோம்

Volume - 2 *(லீபனோன் கீதங்கள்)*

Side A		Side B	
1	துதிப்பதே என் தகுதியல்லோ	1	இன்ப கிறிஸ்தேசுவே
2	சீயோனே! சீயோனே	2	ஜெயங்கொண்ட தாசர்களே
3	என் இயேசுவே என்னோடு	3	உம் பாதத்தைக் கண்ணீரால்
4	அல்லேலுயா! என்	4	அல்பா ஒமேகா
5	இயேசு நல்லவரே	5	கூப்பிடும் குரலை கேட்டிடும்
6	மனம் மகிழ்ந்து தினம்	6	நின் நாமம் பாடாமல்

Volume - 3 *(லேவியர் கீதங்கள்)*

Side A		Side B	
1	லேவியரே! ஆசாரியரே	1	தேவ சேவை செய்திடவே
2	கர்த்தர் என் மேன்மையும்	2	என்றென்றும் மாறிடா
3	என் இன்ப துன்ப	3	நான் நம்பிடும் இயேசு தேவா
4	எந்தன் வாஞ்சை	4	அந்த நாள் நெருங்கிடுதே
5	காலைதோறும் கர்த்தனே	5	சிலுவைப் பாடுகள் சுமந்தே
6	இயேசுவின் நாமம்		

Volume - 4 *(வல்லமை கீதங்கள்)*

Side A		Side B	
1	வல்லமை கீதங்கள்	1	திருச்சபையே
2	கர்த்தருக்குக் காணிக்கை	2	வல்லமை! வல்லமை
3	சீயோனில் நான்	3	மகிமையாய் வெற்றி
4	இயேசு என் வாழ்வில்	4	அன்பு எங்கும்
5	அதிசயமானவர்	5	என்ன விந்தை
6	ஏழைக் கோலம்	6	வல்லமைக் கீதங்கள்

உன்னத கீதங்கள் Vol. 9

பாட்டு 81.

என்னை ஆளும் இயேசு நாதா } 2
உம் வழியில் என்னை நடத்திடுவீர்
உண்மை அழிந்ததை எங்கும் காணேன்.
உன்னத வழியில் நிமிர்ந்து நடப்பேன்.

1. பக்க பலனாய் உற்ற துணையாய் } 2
பெற்ற தாய் போல் கையில் எடுத்தீர்
தகப்பன் தன்மை தனித்து சிறக்க } 2
உரத்த குரலால் வளைத்து அணைத்தீர்
— என்னை

2. தக்க சமயம் ஏற்ற வேளையில்
காத்த கரத்தால் ஆசீர்வதித்தீர்
சர்வ வல்லவர் இயேசு தேவனே
உன்னத ஆவியால் உள்ளத்தில் தங்கினீர்.
— என்னை

3. துன்ப நேரம் தளர்ந்த மனதை
நித்திய புயத்தால் பெலப்படுத்தினீர்
பூரண கிருபை சத்திய தேவனே
உத்தம குணத்தால் துள்ளி தூக்கினீர்.
— என்னை

4. தனிமை நீங்க புனித நாமமே
இனிய வசனத்தால் தேற்றி ஆற்றினீர்
சபையின் தலையாய் உயர்ந்த தேவனே
கண்ணிமை நேரத்தில் உம்மையே காண்பேன்.
— என்னை

பாட்டு 82.

அமைதி ஆலயமே
ஆத்ம நேசரே
நேசத்தின் சோகத்தினால்
நேரில் காண வந்தேன்

1. ஞானத்தின் பூரணமோ.
உம் சிரசின் முள்முடியில்
சரீர மீட்புக்காக
உந்தன் சிலுவை பாடுகளோ!
— அமைதி

2. சுடர் ஒளி சிலுவையிலே
நீர் தொங்கிடும் காட்சிதானே
நெஞ்சத்தை உடைத்திடுதே
கல்மனம் கரைந்திடுதே.
— அமைதி

3. கரங்களின் காயங்களால்
இறங்கிடும் இரு மடங்கு
இரட்சிப்பின் ஆசீர்வாதம்
இதயத்தில் நிலைத்திடுதே.
— அமைதி

4. சொல்லில் அடங்கிடாத
திடநம்பிக்கை பாதைதனை
கால்களின் காயத்தினால்
கண்டு நான் நடந்திடுவேன்.
— அமைதி

பாட்டு 83.

என் உள்ளத்தின் ஆழத்தின் வாஞ்சை
என் இதய தேவன் இயேசு (3)
கடலைப் பிரிக்கலாம்
மலையை உடைக்கலாம்
இயேசுவை விட்டு என்னை } 2
பிரிக்க உடைக்க முடியாதே!
— என்

1. சரீரம்சாட்சியாய் மாறிடுமே
தேவ உணர்வு பாய்ந்திடவே
காலமெல்லாம் நிலைத்திடுமே
கண்கொள்ளா காட்சியின் தரிசனமே .. கடலைப்

2. காரியம் கைகூடி வந்திடுமே
தேவ கட்டளை கைக்கொள்ளவே
நேரமெல்லாம் கிடைத்திடுமே
பறந்திடும் காட்சி தூதன் போல .. கடலைப்

3. பூரண ஜீவியம் கிடைத்திடுமே
தேவ ஆவியின் நிறைவினிலே
நன்மையெல்லாம் நிறைந்திடுமே
நட்டவர் நாட்களில் வந்திடுவார் .. கடலைப்

4. இயேசுவின் சமுகம் இறங்கிடுமே
தேவ பிரசன்னம் வெளிப்படவே
மாயையெல்லாம் நீங்கிடுமே
மன்னவர் இயேசுவின் நாமத்திலே .. கடலைப்

பாட்டு. 84

நான் பாடும் போது என் உதடு } 2
மகிழ்ந்து கெம்பீரிக்கும்
நீர் மீட்டுக் கொண்ட என் ஆத்துமா
மகிழ்ந்து ஆர்ப்பரிக்கும்.

— நான்

1. உயர்ந்த பர்வதம் துள்ளிடுதே } 2
கவர்ந்த சீயோனைப் பாடிடுவேன்
கன்மலை தண்ணீர் பாய்ந்திடுதே } 2
விண்முகம் பார்த்து பாடிடுவேன்

— நான்

2. நாயகன் நன்மையைப் பாடிடவே
சத்திய நீரூற்று பொங்கிடுதே
எத்தனை நாவினால் பாடிடுவேன்
ஆயிரம் நாவுகள் போதாதே

— நான்

3. யூதாவின் சிங்கம் இயேசுவையே
வேதத்தில் கண்டு பாடிடுவேன்
தோல்வியை சந்திக்க நேரமில்லை
தெய்வீக வீரத்தைப் பாடிடுவேன்

— நான்

4. புதிய வானத்தின் அறிவிலே
சிறகு விரித்து பாடிடுவேன்
உருகிடும் நெஞ்சம் திருவாதே.
நெருப்பு நாவினால் பாடிடுவேன்.

— நான்

பாட்டு. 85

விண்ணிலே விண்ணப்பம் செய்கிறவர் *(2)*
பிதாவின் அருகில் ஜொலிக்கிறார்
அவரோடே மகிழ்ந்து உரையாடி *(2)*
மகிமையில் மகிமை கண்டேன் - இயேசுவில்
மகிமையில் மகிமை கண்டேன்.

1. விசுவாச நீதி ஓங்கிடவே
கர்த்தரைக் கண்ட ஆபிரகாமே } *2*
தியாகத்தின் சொந்தம் ஈசாக்கிலே *(2)*
ஜீவனில் ஜீவன் கண்டேன் - தேவனில்
ஜீவனில் ஜீவன் கண்டேன்.
— விண்ணிலே

2. இரட்சிப்பின் மேகம் இறங்கிடவே
கர்த்தரின் முகம் கண்ட நம் மோசே
தாழ்மையின் சிந்தை யோசுவாவிலே
வெற்றியில் வெற்றி கண்டேன் - தேவனில்
வெற்றியில் வெற்றி கண்டேன்.
— விண்ணிலே

3. தேவனின் அற்புதம் செய்திடவே
ஆவியைப் பெற்ற எலியாவே
சேவையின் சிகரம் எலியாவிலே
வீரத்தில் வீரம் கண்டேன் - தேவனில்
வீரத்தில் வீரம் கண்டேன்.
— விண்ணிலே

4. தேவாலய மகிமை நிறைந்திடவே
சிந்தையில் திட்டம் கொண்ட தாவீதே
தேவாலய நிறைவு சாலொமோனிலே
ஆழத்தில் ஆழம் கண்டேன் - தேவனில்
ஆழத்தில் ஆழம் கண்டேன்.
— விண்ணிலே

பாட்டு. 86

முற்றிலும் உம்மையே சார்ந்திடுவேன்
முன்வந்து ஊழியம் செய்திடுவேன் } 2
உற்றவர் பெற்றவர் செல்வம் நீரே.
உறவும் உண்மையும் உம்மில் கொண்டேன் } 2

1. கர்த்தாவே நல்வாழ்வு பெலனானீர்
கரம் பிடித்தவர் கைவிடிரே } 2
இயேசுவே கனிந்த கன்மலையே
அரணான கோட்டையும் அடைக்கலம் நீர் } 2
— முற்றிலும்

2. கர்த்தாவே நம்பிக்கை நங்கூரம் நீர்
முத்தான முதற்பலன் செல்வம் நீரே
இயேசுவே நிறைந்த சுதந்திரமே
போஷித்து காப்பாற்றி வளர்த்திடுவீர்
— முற்றிலும்

3. கர்த்தாவே காருண்ய பர்வதம் நீர்
முதற்பலன் முதன்மையில் சேர்த்திடுவீர்
இயேசுவே நியமித்த ஊழியமே.
கலங்கரை விளக்காய் ஒளிவீசுதே.
— முற்றிலும்

4. கர்த்தாவே சீயோனின் சிகரம் நீர்
சுற்றிலும் சாரோனின் ரோஜா நீரே
இயேசுவே உயர்ந்த தாபரனே
தியானத்தின் இனிமையில் கலந்திடுவீர்.

பாட்டு. 87

எட்டு திசையுமே வட்டமிட்டுமே
கட்டு விடாதே சுவிசேஷ ஊழியமே (6)
திட்டமிட்டுமே செய்திடுவோமே
ஏற்ற காலத்தில் ஏற்ற பலனையே
இயேசுவின் கரத்தில் பெற்றிடுவோமே (2)

1. எடுத்துரைத்திடும் நல்ல சுவிசேஷமே
அடுத்து அடுத்துமே நல்ல கிரியை செய்யுமே } 2
நாடு நகரமே வீடுகளெல்லாம் (2)
பரமனேசுவைப் பாடி சொல்லுவோம். } 2
— எட்டு

2. நல்ல செய்தியை நாடு கேட்டிட
நல்ல சாட்சியின் வாலிபர் தேவையே
மெல்ல மெல்ல சொல்லிட காலமில்லையே
மின்னல் வேகமே எழும்பி சொல்லுவோம்
— எட்டு

3. உற்ற நேரமே மீட்பர் பணியிலே
உண்மை வாலிபனே கிரியை செய்திடும்
மக்கள் மனதிலே மகிமை வசனமே
தக்க நேரமே கிரியை செய்திடும்
— எட்டு

4. சுவிசேஷ வலையிலே நிறைந்த மீன்களே
சாட்சி சபையிலே கூடி வந்திடும்
சுவிசேஷ பணியிலே சபைகள் வளர்ந்திடும்
சுகந்த வாசனை ஓங்கி படர்ந்திடும்
— எட்டு

பாட்டு. 88

நல்ல மேய்ப்பரே
பெரிய மேய்ப்பரே
பிரதான மேய்ப்பரே
நித்திய மேய்ப்பரே
எந்தனை மந்தையில் }
சொந்தமாய் சேர்த்தவர் } 2

— நல்ல

1. சிறை கொண்ட பாவியை }
அறை கூவி அழைத்தவர் } 2
நிறைவில்லா மனதிலே }
மறை நூலை தந்தவர் } 2

— நல்ல

2. பேரொளி வீசியே
காரிருள் அகற்றுவார்
எழுப்புதல் அனுப்பியே
நீதி காவல் செய்குவார்.

— நல்ல

3. சம்பூர்ண பேரின்பம்
ஜீவ ஊற்று ஆலயம்
தேவ சபை வளர்ந்திடும்
நீதி தேவன் பேசுவார்

— நல்ல

4. எக்காளம் முழங்கிடும்
சபை வானில் ஏகிடும்
மணவாளன் இயேசுவின்
புகழ் என்றும் பாடுவோம்.

— நல்ல

பாட்டு. 89

ஜெபத்தைக் கேட்டிடுமே (2)
ஜனத்தை மீட்டிடவே
சத்தியம் நித்தியமே (2)
குற்றத்தை மன்னித்திடும்.

1. இத்தனை கோடிகளும் } 2
வாடி அழியலாமோ }
தயவு, தற்பரனே!
இரத்தத்தால் மீட்டிடுமே.

— ஜெபத்தை

2. அழியும் பாவிகளே
மீட்டு எடுத்திடவே
இரக்கம் உருக்கமே!
கிருபை தந்திடுமே

— ஜெபத்தை

3. பாவம் பெருகுதே
உலகம் அழியுதே
உன்னத தேவனே!
இறங்கி மீட்டிடுமே

— ஜெபத்தை

4. உள்ளம் உருகுதே
கண்ணீர் வடியுதே
கர்த்தர் இயேசுவே!
கருணை கூர்ந்திடுமே.

— ஜெபத்தை

பாட்டு. 90

சீக்கிரம் வருகிறார். (2 }
சீயோன் மணவாளன் (}) 2
சீருடன் வல்ல இயேசு
சீமானை சந்திப்போமே

— சீக்கிரம்

1. ஜீவ வழியிலே } 2
வசன ஜீவனில் }
ஞான சுடர்களாய் } 2
ஜொலித்து ஜீவிப்போமே }

— சீக்கிரம்

2. ஜீவ புஸ்தகத்தில்
நம்நல் பெயரினை
பார்த்து மகிழ்ந்துமே
பூரித்து ஜீவிப்போமே

— சீக்கிரம்

3. ஜீவ விருட்சத்தின்
கனியின் ஜீவனை
ஜீவ காலமெல்லாம்
புசித்து ஜீவிப்போமே

— சீக்கிரம்

4. ஜீவ நதியிலே
பளிங்கு போலவே
தெளிந்த தண்ணீரினால்
சிறந்து ஜீவிப்போமே.

— சிக்கிரம்

பாட்டு 91.

மகிமை கிருபையிலே } 2
நிறைந்து வாழ்வோமே }
இன்ப இயேசுவே என்றும் இன்பமே. (2)

1. இதய ஆழத்திலே } 2
கலங்கும் நேரமே }
கண்டு தேற்றிடும்
கர்த்தர் சமுகமே
களிகூர்ந்து பாடிடுவேன். (2)
— மகிமை

2. கடும் பசியிலே
உணர்வு நடுங்கவே
தேடும் மனதிலே
இயேசு வந்திடவே
செழுமை அடைவேனே
— மகிமை

3. இருள் வெறியிலே
அந்த காரமே
நிந்தை சூழ்ந்திடுதே
கலங்கிடாதே நீ
இயேசு நம் துணையே.
— மகிமை

4. தூய ஆவியே
தூது சொல்லிடுதே
துதிக்கத் துடிக்குதென்
தூய உள்ளமே
மாட்சிமை இயேசுவையே
— மகிமை

பாட்டு 92.

தழல் நெருப்பாய் இறங்கிடும்
நிழல் மேக வாகனம்
சுழல் காற்றை வென்றிட
எழில் இயேசு தோன்றுவார்

— எந்தன்

1. கிருபை கண்கள் ஒளியிலே
கிருபாகரனின் தயவிலே } 2
திருநடை ஏக மாளிகையில்
விருத்தி அடைந்து வளருவேன். } 2

— தழல்

2. ஆலய வாசல் முகப்பிலே
தேவ சாயல் உலாவவே
நீச்சல் ஆழ மகிமையில்
வசன செழிப்பில் விளங்குவேன்.

— தழல்

3. பிரகாச வெளிச்சம் இரவிலே
இயேசு நாமம் பிரபலமே
ஆயிரம் வருடம் பூமியில்
அகமும் மகிழ்ந்து ஆளுவேன்.

— தழல்

4. புதிய வான நிறைவிலே
புதிய பூமியில் குறைவில்லை
புதிய எருசலேம் நகரிலே
சீயோன் வாழ்வை துவங்குவேன்.

— தழல்

பாட்டு 93.

இனிய இயேசுவைப் பாடிடுவோம்
ஆனந்தமாய் வெற்றி சிறந்திடுவோம் } 2
அன்பின் மாட்சிமை இரட்சகரே
ஆயுள் காலமெல்லாம் காப்பவரே. } 2

1. கண்ணீரோடே இன்று விதைத்திடுவோம்
கெம்பீரமாய் அன்று பலன் பெறுவோம் } 2
விளம்பிய வேதத்தின் வேகத்தோடே
ஆகாபின் இரதத்தை முந்திடுவோம். } 2
— இனிய

2. ஏங்கிடும் மாந்தரின் குரல் கேட்போம்
இடறி விழுந்தோரை தூக்கிடுவோம்
பரலோக பரவச பாசத்தோடே
பழிவாங்கும் பார்வோனை வீழ்த்திடுவோம்
— இனிய

3. எந்நாளும் சுவிசேஷம் எங்கும் சொல்லுவோம்
யூதாவின் சிங்கத்தை உயர்த்திடுவோம்
எழுப்புதல் தேசத்தில் தோன்றிடவே
ஏரோது மன்னனைத் தகர்த்திடுவோம்.
— இனிய

4. சத்திய ஊழிய வழி நடந்து
உத்தம உலகத்தை உருவாக்குவோம்
திருச்சபை வளர்ச்சி கண்டிடுவோம்
சாத்தானை ஜெயித்து மேற்கொள்வோம்.
— இனிய

பாட்டு 94.

தேவா என்னை ஆசீர்வதியும் - என்
எல்லையைப் பெரிதாக்கும்
உமது கரமே என்னுடன் இருந்து
எல்லா தீங்குக்கும் விலக்கிடும் } 2
தேவனே, இயேசுவே, தேவனே,
இயேசு தேவா...

1. தாகம் தீர்க்கும் தண்ணீரையும்
வறட்சி நீக்கும் ஆறுகளும் } 2
தேவ ஜனத்தில் ஆவியையும்
இன்று பலமாய் ஊற்றிடும். } 2

தேவ சபையில் எழுந்தருளி மகிமை பொழிந்திடுவீர்
மகிழ்ச்சி பொங்க பாடிடும் மக்கள் மனதில்
நிறைந்திடுவீர்.

2. இரட்சிப்பின் மதில்கள் உயர்ந்திட
வாசல்கள் துதியால் நிறைந்திடும்
ஊழிய எல்லையை நீர் விரித்து
எந்நாளும் சேவையில் கலந்திடும்.
— தேவ சபையில்

3. என்றென்றும் இயேசுவின் கரத்தினால்
அன்றன்று தேவையைப் பெற்றிடுவேன்
ஒன்றுக்கும் இனி குறைவு இல்லை
சொந்தமாய் உம்மைச் சார்ந்திடுவேன்.
— தேவ சபையில்

4. தெய்வீக வாசனை சாட்சிக்கே
தீங்கை முற்றும் நீக்கிடுமே
ஆவியும் அருளும் தங்கிடவே
ஞானத்தின் அறிவு பெற்றிடுவேன்.
— தேவ சபையில்

பாட்டு 95.

அன்பின் பூரணமே
இதயம் தேடி வா! } 2
உன் ஆழம் நீளமே
உயரம் புகழ்வேனே. } 2

1. உயர்வு தாழ்விலே
அயராது நடத்தியே } 2
அன்பர் இயேசுவை
என்னோடு இணைத்திடு. } 2

— அன்பின்

2. கொதித்து எழும்பியே
மதிலைத் தாண்டுவேன்
சேனைக்குள் பாய்கிறேன்
ஜெயத்தைத் தந்திடு.

— அன்பின்

3. கடலில் நடந்திட
எடுத்து நிறுத்திடு
மலையைப் பெயர்த்திடும்
விசுவாசம் தந்திடு.

— அன்பின்

4. மனதின் நிலையிலே
உறுதி நிலைத்திட
பக்தி வரம் தந்து
பரத்தோடு இணைத்திடு

— அன்பின்

பாட்டு 96.

சிலுவை மரத்தில் தொங்குகிறார்
மனித மீட்புக்கு சீயோன் நேசர்.

1. சிலுவையின் வேதனை பெருகிட்டாலும்
நிந்தை அவமானம் சூழ்ந்திட்டாலும்
மாளும் மாந்தரின் மீட்பு உணர்ந்து
பிதாவே இவர்களை மன்னியும் என்றார்
மாட்சிமை மகுட இரட்சகர் இயேசு.
— சிலுவை

2. ஞான இதயம் வேத நிறைவு
அறிவு களஞ்சியம் அன்பின் ஆலயம்
கள்ளன் உள்ளம் உடைந்ததைக் கண்டு
இன்றைக்கு நீ என்னோடே கூட
பரதீசிலிருப்பாய் என்றார் இயேசு.
— சிலுவை

3. பாசம் கொண்டவர் பரலோக நாதர்
பற்றிடும் பண்பின் வசனம் மொழிந்தார்
ஸ்திரீயே அதோ உன் மகன் என்றார்
சீஷனை நோக்கி அதோ உன் தாய்
என்றார் இயேசு மெய் சிலிர்க்க.
— சிலுவை

4. இன்ப இயேசு உரிமை கொண்டு
இன்னல் நீக்கும் ஒளி முகம் காண
என் தேவனே என் தேவனே
ஏன் என்னைக் கைவிட்டீர் என்று
கூப்பிட்டு பிதாவோடு இணைந்திட்டார்
— சிலுவை

5. கன்மலை சிகரம் இயேசுவே
சுரந்து வந்திடும் ஜீவ ஊற்று
சிலுவை மரத்தில் தொங்குகிறார்
தாகமாயிருக்கிறேன் என்றவரே - நம்
தாகம் தீர்க்கும் ஜீவ நதி
— சிலுவை

6. முற்றிலும் அழகு பூரண ரூபம்
கற்றவர் கண்டிடும் கரைந்த உள்ளம்
கருத்து நிறைந்த சீயோன் சிகரம்
முடிந்தது என்றார் வெற்றி தொனியில்
முடிவில்லா மகிமை மாளிகை கண்டார்.
— சிலுவை

7. இன்றும் என்றும் மாறாதவர்
இனிய நாமத்தில் திகழ்ந்தவர்
பிதாவே உம்முடைய கைகளில்
என் ஆவியை ஒப்புவிக்கிறேன்
ஜீவனில் ஜீவன் கண்டு மகிழ்வேன்.
— சிலுவை

பாட்டு 97.

இயேசு நல்ல இயேசு (2)
ஒளி மேகமாய் சூழ்ந்து
வாழ்வில் மகிழ்ச்சி பொழிந்து } 2
பூரிக்கும் உள்ளத்தில் நிறைவு.

1. சீயோன் மீட்பு சிகரம் } 2
தேயாத தெய்வீக அன்பு
ஓயாத கிருபை வெள்ளம் } 2
ஓங்கி முழங்கும் நாதம்.
— இயேசு

2. பாடல் நதியின் ஊற்று
லீலி புஷ்ப நேசர்
பூரண ரூப அழகு
ஓங்கின உன்னத நேசம்.
— இயேசு

3. வீரிய வாசனை தைலம்
தீவிரம் விரும்பும் மதுரம்
ஆற்றி தேற்றும் இதயம்
ஓங்கும் மாட்சிமை மகுடம்.
— இயேசு

4. ராஜ மேன்மை காட்சி
நேர்மை நிறைந்த நீதி
நாடு போற்றும் நாமம்
ஞான பொக்கிஷ வேதம்.
— இயேசு

பாட்டு 98.

இயேசு கிறிஸ்துவை உயர்த்தியே
நான்கு ஜீவன்கள் பாடிடுதே } 2

ஆமென் அல்லேலூயா
ஆமேன் அல்லேலூயா } 2

1. ஜீவன்கள் சாயல் அக்கினித் தழல்
தோற்றத்தில் எரிகிற தீவர்த்தி
கண் கொள்ளா காட்சி கண்களோடே
சிறகை விரித்து ஓடிடுதே.
— இயேசு

2. ஜீவன்கள் முகங்கள் அழகிய ரூபம்
நிமிர்ந்து இணைந்த ஜெயத்தினாலே
தன் தன் பாதையில் திரும்பாமல்
மின்னல் வேகமாய் பாய்ந்திடுதே.
— இயேசு

3. ஜீவன்கள் தலைமேல் பிரகாச மண்டலம்
நீல இரத்தின சிங்காசனம்
சீரிய மனுஷ சாயல் கொண்டு
நித்திய காலமாய் ஆண்டிடுதே.
— இயேசு

4. மழை மேகம் சூழ்ந்த தோற்றத்திலே
அக்கினி சொகுசா பிரகாசமே
கூப்பிடும் தெய்வீக சத்தம் கேட்டேன்.
இயேசுவின் மகிமை அங்கு கண்டேன்.
— இயேசு

பாட்டு 99.

ஆறுதல் இயேசுவே (2)
அழைத்தீரே அன்புடனே
அயராத சேவையிலே
வழுவாது காத்தீர் ஐயா.

1. எந்தன் துணை நீரே
ஜெயமாய் நடத்திடவே } 2
நம்பியே வந்தேனே
சொந்தமாய் கொண்டீர் ஐயா. } 2

— ஆறுதல்

2. உந்தன் நிகர் நீரே
மாறாத மனம் தம்மில்
மனம் விட்டு பேசிடவே
மன்னவா மீட்டீர் ஐயா.

— ஆறுதல்

3. பந்தய பொருள் நீரே
ஒப்பந்த ஓட்டத்திலே
வெற்றி அடைந்திடவே
வீரியம் தந்தீர் ஐயா.

— ஆறுதல்

4. கற்றவர் பொருள் நீரே
எட்டி பிடித்திடவே
பரிசுத்த கர்த்தரே
கருத்துரை நிறைத்தீர் ஐயா.

— ஆறுதல்

பாட்டு 100.

இயேசு இருப்பிடம்
மகிழ்ச்சி சமுகமே } 2
மகிமை சமுகமே
இயேசு இருப்பிடம் } 2

1. அங்கும் இங்கும் அலைந்தேன்.
எங்கும் நிம்மதி இல்லை } 2
தங்கத் தந்தை இயேசு
என்னை மீட்டு எடுத்தார். } 2
— இயேசு

2. சற்று திகைத்த என்னை
பற்றிப் பிடித்து எடுத்தார்
வெற்றி நிலையில் இயேசு
தூக்கி எடுத்து மகிழ்ந்தார்.
— இயேச

3. இயேசு எந்தன் தகப்பன்
வல்ல உரிமை பெற்றேன்
மரணக் கண்ணி தெறிக்க
ஜீவன் தந்து வளர்த்தார்.
— இயேசு

4. ஆசீர் கரம் நீட்டி
அன்பு வாழ்வு தந்தார்
வான விருந்தை அருந்த
விண்ணில் பறந்து செல்வேன்.
— இயேசு

Volume-5 (கிருபை கீதங்கள்)

Side A		Side B	
1	துதி உமக்கே	1	தேவா கிருபை தாருமே
2	தொனி! தெய்வீகத் தொனி	2	இயேசு இம்மட்டும்
3	கர்த்தரின் கிருபைகளை	3	இன்பதுன்ப நேரம்
4	வல்லமையுடையவர்	4	சிலுவையில் சாட்சியே
5	ஜீவ நதி	5	தூதர்கள் கீதங்கள்

Volume -6 (ஆராதனை கீதங்கள்)

Side A		Side B	
1	ஆராதிக்கக் கூடினோம்	1	தேவாதிதேவன் இயேசு
2	கிருபை இயேசுவின் கிருபை	2	குதுகுல நாள் இது
3	இரட்சகர் இயேசு!	3	உயிர்த்தெழுந்தார் இயேசு
4	விவாகம் தூய்மை வாழ்வே	4	இயேசுவின் இரத்தம் ஜீவனே
5	இயேசுவின் பாதம்	5	மீட்பர் உலகில் பிறந்தார்

Volume - 7 (வெற்றி கீதங்கள்)

Side A		Side B	
1	கர்த்தாதி கர்த்தா, இராஜாதி இராஜா	1	துதித்திடுவோம் என்றும் துதித்திடுவோம்
2	என் நெஞ்சமே நீ	2	வேதம் விலை மதியாத முத்து
3	அழைத்தவர் நடத்துவார்	3	கர்த்தரைத் துதிப்போம்
4	இதயம் கவர்ந்த நேசரே	4	இயேசுவே என் தேவனே
5	சிலுவையே! இயேசுவின்	5	ஆவூய தூய ஆவியே

Volume - 8 (மகிமை கீதங்கள்)

Side A		Side B	
1	மேன்மையான எண்ணங்களும்	1	துதி கனம் மகிமை எல்லாம்
2	இயேசுவே தெரிந்தெடுத்தீர்	2	மகிமை பொழியும் நேரம்
3	தேவனின் எலியா இங்கே	3	கூப்பிட்ட நாளிலே
4	உம் சித்தம் இயேசுவே	4	பயப்படாதே
5	நீதியும் நியாயமும்	5	கடந்திடும் காலம் கடைசி

பாஸ்டர் எம். இராஜேந்திரன்
நற்செய்தி ஸ்தாபனம்
14, இரயில்வேபீடர் ரோடு,
பாளையங்கோட்டை-627 002.

பாஸ்டர் M. இராஜேந்திரன்

அவர்கள் இயற்றிப் பாடிய பாடல்கள் அடங்கிய

இசை நாடாக்கள்

GOOD NEWS MISSION
CHRIST IS OUR HOPE

L. P. இசைத்தட்டு ஒன்றின்
விலை ரூ. 52/-

இசை நாடா ஒன்றின்
விலை ரூ. 35/-
தபாலில் பெற ரூ. 40/-

GOOD NEWS MISSION
14. RAILWAY FEEDER ROAD,
PALAYAMKOTTAI-627 002.
(Phone: 71877, 71484)